கோழிப் பண்ணையாளர்களின் கோரிக்கையை ஏற்று நலவாரியம் அமைத்திடுக!

நாமக்கல் புறவழிச் சாலைத் திட்டத்தை விரைந்து முடித்திடுக!

சட்டப்பேரவையில் நாமக்கல் தொகுதி உறுப்பினர் – பெ.ராமலிங்கம் கோரிக்கை

சென்னை, ஜூன் 27-

சட்டப்பேரவையில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கையில் நாமக்கல் தொகுதி உறுப்பினர் பெ. ராமலிங்கம் பேசுகையில் நாமக்கல் புறவழிச் சாலைத் திட்டத்தை விரைந்து முடித்திட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

நாமக்கல் தொகுதி பெ. ராமலிங்கம் பேசியதாவது:-

இணையற்ற நூற்றாண்டின் கற்கண்டாய் இனிக்கும் ஈடில்லாத தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகின்றேன்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பு வழங்கிய தமிழ்நாட்டின் திராவிட மாடல் ஆட்சியை மூன்று ஆண்டுகள் சிறப்பாக நிறைவு செய்து, தமிழ் நாட்டு மக்களின் நெஞ்சங்களில் நீங்கா இடம்பெற்று, நடந்து முடிந்து நாடாளுமன்றத்தேர்தலில் நாற்பதுக்கு நாற்பது வெற்றிப் பெற்று, வரலாற்று சாதனைப்படைத்து, வானமே பூமிக்கு வந்தது போல, மலையாய்; ஈரமாய்; வீரமாய்; தாயாய்; தந்தையாய்; தமிழ்நாடு மக்களின் ஒவ்வொரு இல்லத்திலும், இதயத்திலும் வீற்றிருக்கும் முதலமைச்சர் அவர்களை வணங்குகின்றேன்.

பூமி சூரியனை சுற்றி வருவது, எப்போதும் மாறாத இயற்கை. ஓர் இளஞ்சூரியன் எப்போதும் ஓய்வு இல்லாமல் பூமியை சுற்றி வருகிறது. ஊற்சாகமாக, உத்வேகமாக எங்கள் உதயாவாக, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களை வணங்குகின்றேன். அவை முன்னவர் அவர்களுக்கும், நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களுக்கும், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், அரசு கொறடா அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர் அனைவருக்கும் எனது பணிவான வணக்கத்தை உரித்தாக்குகின்றேன்.

நாமக்கல் நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தியும், பாதாள சாக்கடை திட்டத்தை செயல்படுத்தவும், ஆணை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் அண்ணன் உதயநிதி அவர்களுக்கும், நாமக்கல் தொகுதி மக்களின் சார்பாக எனது மனமார்ந்த நன்றித் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் 48.45% மக்கள் நகர்புறத்தில் வசிக்கின்றனர். ஒட்டு மொத்த இந்தியாவையும் ஒப்பிடுகையில் தமிழ்நாட்டின் நகர்ப்புற மக்களின் தொகையின் பெருக்கம் கணிசமான, விரைவான வளர்ச்சி விகிதத்தை வெளிப்படுத்துகிறது.

எனவே, தான் தொலை நோக்குபடி 2021-2031ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குடிநீர் வழங்கல், தூய்மை இந்தியா திட்டம், அறிவு சார் மையங்கள், நகர்ப்புற பசுமையமாக்கம் போன்ற முக்கியத்துவம் வாய்ந்தவற்றில் நகர்புற வசதிகளையும், சேவைகளையும் வழங்க கவனம் செலுத்தப்படுகிறது.

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் மூலமாக மண் சாலைகளை தார் சாலைகளாக மாற்றுதல், தினசரி சந்தை வளாகம், நீர் நிலைகளை தூர்வாருதல், பூங்காக்கள் அமைத்தல், நவீன எரிவாயு தகனமேடை அமைத்தல் போன்ற எண்ணற்றப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றது.

குடிநீர் வழங்கல் துறையின் மூலமாக தமிழகத்தில் பல்வேறு குடிநீர் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, அனைத்து கிராமபுற ஏழை, எளிய மக்களும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் பெற இந்த 3 ஆண்டுகால

திராவிட மாடல் ஆட்சியில் சிறப்பான பல திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகின்றது.

எனது நாமக்கல் சட்டமன்றத் தொகுதியில், நாமக்கல் நகராட்சி மற்றும் மோகனூர் பேரூராட்சியில் இந்த மூன்று ஆண்டுகளில் மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்கின்ற வகையில் கூட்டுக்குடிநீர் திட்டம், அறிவுசார் மையம், தினசரி சந்தை, வார சந்தை, வணிக வளாகம், சமூதாயக்கூடம், எரிவாயு தகனமேடை, கழிவுநீர் வாய்க்கால், கான்கீரிட் சாலை போன்ற பல்வேறு பணிகள் நகராட்சித் துறையின் மூலமாக செயல்படுத்தப்பட்டதற்கு இந்த நேரத்திலே எனது நன்றியை உரித்தாக்குகின்றேன்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ் நாடு அரசு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் அனைத்து தர மக்களுக்கும் பயனளிக்கும் வகையிலும், அவர்களுடைய வாழ்வாதாரத் தினை மேம்படுத்தும் வகையிலும் தொலைநோக்குப் பார்வையுடன் பல புதுமையான திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது. ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் திறம்பட திட்டங்களைச் செயல்படுத்தி வருவதில் நாட்டின் முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு தொடர்ந்து முன்னிலையில் இருந்து வருகின்றது.

இத்துறையில் வகுக்கப்பட்டுள்ள கொள்கைகள், கிராமப்புறங்களில் இருப்பிடம், சுகாதாரமான குடிநீர், தரமான சாலை வசதி, அனைத்து பகுதிகளுக்கும் மின்வசதி போன்ற அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் நடைபெற்று வரும் திட்டங்கள், மகளிர் நலனுக்கு உறுதுணையாக இருக்கும் பல்வேறு வகையான நலத்திட்ட உதவிகள் ஆகியவை சமூக நீதி மற்றும் சமமான வளர்ச்சி ஆகிய குறிக்கோளுடன் வலிமையானதாக அமைந்துள்ளது. ஊரக வளர்ச்சித் திட்டங்கள் ஊரக மக்களின் வருமானம் மற்றும் வாழ்வாதாரத்தை உயர்த்துவதை முக்கிய கடமையாகக் கொண்டுள்ளது.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கொண்டு வரப்பட்ட திட்டம். இத்திட்டத்தின் மூலமாக கிராமப்புறத்திலே அனைத்து வகையான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திச் செய்யும் வகையில் சிறப்பாக இந்தத் திட்டம் செயல்பட்டு வந்தது. கடந்த பத்து ஆண்டுகளாக இந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டிருந்தாலும், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றப் பிறகு, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்II என்று அறிமுகப்படுத்தி இத்திட்டம் இன்று சிறப்பாகச் செயல்பட்டு, கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளில் அனைத்து கிராமங்களும் பயனடையும் வகையில் ஏறத்தாழ 16 துறைகளின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், முத்தமிழறிஞர் கலைஞர் காலத்தில் இத்திட்டம் முதன்முதலாக கொண்டுவரப்பட்டது. கிராமங்களை நகரங்களோடு இணைக்கவும், நெடுஞ்சாலைத் துறைச் சாலைகளோடு இணைக்கவும் இத்திட்டம் கொண்டுவரப்பட்டது. முதலமைச்சர் அவர்கள், தற்போது "முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்" மூலமாக மீண்டும் அனைத்து கிராமங்களிலும் சாலைகள் அமைக்கும் பணி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கலைஞரின் கனவு இல்லம் திட்டம், இத்திட்டம் முத்தமிழறி ஞர் கலைஞர் ஆட்சி காலத்தில் கிராமங்களில் ஏழையெளிய மக்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்பட்டு, மின் இணைப்பும் வழங்கப்பட்டது. தற்போது முதலமைச்சர் அவர்கள் அவற்றை மறுசீரமைப்பதற்காக மீண்டும் நிதிகளை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் மூலமாக முதற்கட்ட மாக 2024-2025 ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் புதிய வீடுகள், வீடு ஒன்றிற்கு 3.50 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படுகிறது.

மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் பெரியார் நினைவு சமத்துவபுரங்கள், பள்ளி உட்கட்ட மைப்பு மேம்பாட்டுத் திட்டம், அரசு திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட ஊரக வீடுகளை சீரமைத்தல் உள்ளிட்ட பல்வேறு திட்டப் பணிகள் சிறப்புற அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

எனது நாமக்கல் தொகுதியில், நாமக்கல், மோகனூர் சாலையில் செயல்பட்டு வந்த மாவட்ட தலைமை அரசு மருத்துவமனை, மாவட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டு, அங்கு சுமார் 9 ஏக்கர் இடம் காலியாக உள்ளது. பொதுமக்கள் புதிய மருத்துவமனைக்கு செல்ல நீண்ட தூரம் பயணிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளதால் மோகனூர் சாலையில் காலியாக உள்ள இடத்தில் சிறிய அளவிலான தாலுக்கா மருத்துவமனை அமைக்க ஆவன செய்ய வேண்டும்.

நாமக்கல் திருச்சி சாலையில் அமைந்திருக்கும் கால்நடை மருத்துவமனை, 10 கிலோ மீட்டர் தொலைவில் கால்நடை மருத்துவக் கல்லூரிக்கு தற்பாது இடமாற்றம் செய்யப்பட்ட காரணத்தால் திருச்சி சாலையில் காலியாக உள்ள பழைய இடத்தில் கால்நடை பராமரிப்பு துறையின்கீழ் அனைத்து மாநகராட்சிகளிலும் செயல்பட்டு வரும் பன்முக கால்நடை மருத்துவமனையைக் கொண்டுவர ஆவன செய்ய வேண்டும்.

நாமக்கல்லில் புதிய பேருந்து நிலையம்

நாமக்கல்லில் புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு வருகிறது. கூடுதல் பணிகளுக்கு மேலும் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். மோகனூர் பேரூராட்சியாகச் செயல்பட்டு வருகிறது அதனை நகராட்சியாக தரம் உயர்த்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். புதுச்சத்திரம் ஒன்றியம் நவணி ஊராட்சியை பேரூராட்சியாக தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். நாமக்கல் ஒன்றியம் மற்றும் மோகனூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகளில் நிலவுகின்ற குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க மோகனூர் காவேரி ஆற்றிலிருந்து ஒரு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

நாமக்கல் நகரில், மைய பகுதியில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான கொசவம்பட்டி ஏரியின் புனரமைப்பு பணி தற்போது நடந்துகொண்டு வருகிறது. மீதமுள்ள பணிகளை முடித்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரத் தேவையான நிதியினை இந்த ஆண்டு வழங்கி பணிகளை விரைந்து முடிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

நாமக்கல் புறவழிச் சாலைத் திட்டம் சுமார் 22 கிலோ மீட்டர் தொலைவு கொண்டது. தற்போது நெடுஞ்சாலைத் துறை மூலமாக 12 கிலோ மீட்டர் தூரத்திற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மீதமுள்ள 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு நில எடுப்பு பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. எனவே, இந்த ஆண்டு அந்த 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு சாலை அமைக்கும் பணிக்கு நிதி ஒதுக்கி பணியினை நிறைவு செய்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

புதுச்சத்திரம் ஒன்றியம் நைனாமலை வரதராஜபெருமாள் கோயில் மலைப்பாதை அமைப்பதற்கு 7 கிலோ மீட்டர் தூரத்திற்கு மண் சாலை அமைக்கும் பணி முடியும் தருவாயில் உள்ளது. இது முதல்வர் அவர்கள் தேர்தல் நேரத்திலே அறிவித்த அறிவிப்பு. எனவே, அந்தச் சாலையைத் தார்சாலையாக மாற்றி நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக இந்த ஆண்டே அமைத்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

நாமக்கல்லில் பிரதான தொழிலாக லாரி தொழில் உள்ளதால் லாரிகளை நிறுத்தி வைப்பதற்கு ஒரு Parking yard அமைத்துத்தர ஆவண செய்ய வேண்டும். சேலம், திருச்செங்கோடு, பரமத்தி, திருச்சி, மோகனூர் மற்றும் துறையூர் ரோடுகளில் உள்ள மாநில நெடுஞ்சாலையின் நடுவில் உள்ள தடுப்புகளில் (centre median) மின்கம்பம் அமைத்து, இருபுறமும் நகராட்சியின் மின் விளக்குகள் அமைத்துதர ஆவன செய்ய வேண்டும். நாமக்கல் மாவட்ட விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி நாமக்கல் உழவர் சந்தையின் தரைதளத்தை உயர்த்தி வடிகால் வசதி ஏற்படுத்திடவும், கூடுதல் கடைகள் அமைத்திடவும் ஆவன செய்ய வேண்டும். மோகனூர் அசலதீபேஸ்வரர் ஆலயம் புனரமைத்து குடமுழுக்கு விழா நடத்திட வேண்டும். திருச்செங்கோடு சாலை முதல் பொய்யேரிக்கரை சாலை வரை வெள்ளவாரி தெரு முதல் சேந்தமங்கலம் சாலை வரை மற்றும் அனுமான் கோயில் தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைத்துத்தர வேண்டும். துறையூர் சாலையிலுள்ளநகராட்சி மண்டபம் அருகில் வணிகவளாகம் கட்டித்தர ஆவன செய்ய வேண்டும். நகராட்சி அலுவலக கட்டடம் விரிவாக்கம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாமக்கல் சட்டமன்ற தொகுதியில் உள்ள மோகனூர் மக்களின் நீண்டநாள் கோரிக்கையான மோகனூரில் தீயணைப்பு நிலையம் அமைத்துத்தர முதல்வர் அவர்களை வேண்டி கேட்டுக்கொள்கின்றேன். மக்கள் தொகை பெருக்கத்தின் காரணமாக புதிய பேருந்து நிலையம் அமைய உள்ள முதலமைப்பட்டியில் புதியதாக ஒரு காவல் நிலையம் அமைத்திட வேண்டும்.

கதவணைத் திட்டம்

நாமக்கல் மாவட்ட விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையான ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட மோகனூர் மற்றும் கரூர் மாவட்டம் நெரூர் இடையே கதவணைத் திட்டத்தை இந்த ஆண்டு அமைத்துத்தர ஆவன செய்ய வேண்டும். (மணிய டிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம்.

மோகனூர் வாய்க்காலின் கடைமடைப் பகுதியான ஒருவந்தூர் முதல் வடுகப்பட்டி வரை 3 கி.மீ. புனரமைப்பு பணிகளை உடனே செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மோகனூர் வட்டம் ஆண்டாபுரம் எம். களத்தூர் இடையே புதிய கரை பொட்டனாற்றின் குறுக்கே நீர்வளத் துறையின்மூலமாக புதிய பாலம் அமைத்துத்தர வேண்டும்.

நாமக்கல் மாவட்டத்தில் புஞ்சைபுகலூர் அனிச்சம்பாளையம் கதவணைத் திட்டப் பணிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இத்திட்டத்திலிருந்துதான் மோகனூர் வாய்க்காலுக்கு பாசனம் கொண்டு செல்கின்ற shutters பொருத்தப்பட்டுள்ளது. ஆனால், அந்த shutters 1 மீட்டர் உயரத்திற்கு பொருத்தப்பட்டுள்ள காரணத்தால் நீர் குறைவாக வரும் காலங்களில் விவசாயிகளுக்கு மோகனூர் வாய்க்கால் வழியாக நீர் எடுத்துச் செல்வதில் மிகப்பெரிய ஒரு சிரமம் உள்ளது. எனவே, shutters உயரத்தைக் குறைத்து, அனைத்து காலங்களிலும் தங்குதடையின்றி விவசாயிகள் பயன் பெறுகின்ற வகையிலே அதனை மாற்றியமைக்கக் கேட்டுக்கொள்கின்றேன்.

நாமக்கல் தொகுதிக்குட்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உத்தமபாளையம், மோகனூர், கீரம்பூர், அனியாபுரம் ஆகிய கிராமங்களில் புதிய மின் நிலையம் மற்றும் மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாமக்கல் மாவட்டத்தில் கோழிப் பண்ணை பிரதான தொழிலாக விளங்குகிறது. கோழிப் பண்ணையாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று நலவாரியம் அமைத்திட ஆவன செய்யுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களை பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். நாமக்கல் நகருக்கு மிக அருகில் சித்தர் மலை அமைந்துள்ளது. இதற்கு சாலை வசதி, மின் வசதி, பூங்காக்கள் அமைத்து நாமக்கல் நகருக்கு ஆன்மிக சுற்று லாத்தலமாக சித்தர்மலையை மாற்றித்தர ஆவன செய்ய வேண்டும். நாமக்கல் தொகுதியில் ஊராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளில் விவசாயிகள் அதிகம் உள்ள காரணத்தினால் கிராமப்புற சாலைகளை தரம் உயர்த்திட ஊரக வளர்ச்சித் துறை மூலமாக நிதி ஒதுக்கீடு செய்ய ஆவன செய்ய வேண்டும்.

ஊரக வளர்ச்சித் துறையில் செயல்பட்டு வரும் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் மற்றும் பிற அலுவலகங்களில் அலுவலக உதவியாளர்கள், இரவு காவலர்கள், பதிவுரு எழுத்தர்கள், ஈப்பு ஓட்டுநர்கள் உள்ளிட்ட காலிப் பணியிடங்களை எங்கள் மாவட்டத்தில் நிறைவேற்றிட ஆவன செய்ய வேண்டும். புதுச்சத்திரம் கால்நடை மருத்துவமனையை தரம் உயர்த்திட ஆவன செய்ய வேண்டும். நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் ஒன்றியம், பொட்டணம் ஊராட்சியில் அதிகளவில் கால்நடைகள் இருக்கின்ற காரணத்தால் அங்கு ஒரு கால்நடை கிளை மருந்தகம் அமைத்துத்தர வேண்டும்.

நாமக்கல் நகர் அருள்மிகு நரசிம்மர் சுவாமி திருக்கோயில் பணியாளர்களுக்கு அருள்மிகு பலபட்டறை மாரியம்மன் திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு செல்லாண்டியம்மன் திருக்கோயிலுக்கு சொந்தமான நிலத்தில் புதியதாக கட்டப்படும் பணியாளர் குடியிருப்பு பணியை உடனே துவங்கிட ஆவன செய்ய வேண்டும். மோகனூர் காந்தமலை முருகன் கோயிலுக்கு சொந்தமான இடத்திற்கு அப்பகுதி மக்களின் தேவைக்கேற்ப ஒரு திருமண மண்டபம் அமைக்க ஆவன செய்ய வேண்டும்.

மோகனூரில் ஏற்கெனவே செயல்பட்டு வந்த மோகனூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தை அப்பகுதி விவசாய உற்பத்தியாளர்களின் நலனை கருத்தில் கொண்டு மீண்டும் துவங்கிட ஆவன செய்ய வேண்டும். கீரம்பூர் அல்லது தும்மங்குறிச்சி பகுதியில் துணை வேளாண்மை விரிவாக்க மையம் அமைக்க ஆவன செய்ய வேண்டும்.

இந்த மானியக் கோரிக்கையில் எனக்கு பேச வாய்ப்பு வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கும், தாங்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்வாறு பெ. ராமலிங்கம் பேசினார்.

நீலகிரி - கோவையில் கனமழை!

சென்னை,ஜூன் 27-

நீலகிரி, கோவை மாவட்டங்களில் 12 முதல் 20 செ.மீ வரை மழை பொழிவிற்கான வாய்ப்பு இருப்பதால் அம்மாவட்டங்களுக்கு மிக கனமழைக்கான ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. திருப்பூர், திண்டுக்கல், தேனி, தென்காசி, நெல்லை, குமரி ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

அலமேலு அப்பாதுரை
ஜூன் 27 (2001)

தி.மு.க. மகளிர் அணிச் செயலாளராகவும் – தலைமை நிலையச் செயலாளராகவும் – தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் – சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

தி.மு.க. மகளிர் அணியினைச் சிறப்பாக கட்டிக் காப்பாற்றியவர்.

1938ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி திணிப்பு எதிர்ப்பு கிளர்ச்சியிலும், பின்னர் நடைபெற்ற கறுப்புக் கொடி போராட்டம், விலைவாசி உயர்வு போராட்டம் உள்ளிட்ட பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

அ. மணிமேகலை
ஜூன் 27 (2017)

தனது இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

மெரட்டூர் கிளைச் செயலாளர், மீஞ்சூர் ஒன்றிய துணைச் செயலாளர், மாவட்ட துணைச் செயலாளர், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

தலைவர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழுக்களை திருவள்ளூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் தொடங்கி மகளிரின் முன்னேற்றத்திற்கு பாடுபட்டவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.